மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தப் பழைய சட்டத்தினுடைய நகலை அச்சடித்துத் தருவதற்கு இயலுமா என்பதை அந்த இலாக்காவில் கேட்டு முடிந்த வரையில் அதற்கான முயற்சியை மேற்கொள்கிறோம் என்ற அளவில் மட்டும் தெரிவித்து கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சைக்கிளோஸ்டைல் பண்ணிக் கூடக் கொடுக்கலாம்.

(8) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகள் அகற்றப் படுவதுகுறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் அறிவிப்பு. (*) சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அந்தப் பகுதி நீக்கப்படுகிறது. இதைப் பத்திரிக்கையாளர்கள் வெளியிட வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(7) அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்கல் (எண் 3) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 13-70)—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்கல் (எண் 3) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 13/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

இரண்டாவது பிரிவு, அட்டவணை, முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்கல் (எண் 3) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 13/70) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைந்து, பேரவை மீண்டும் திங்கட் கிழமை காலை 9 மணியளவில் கூடும்.